தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, வைகாசி 25, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூன் 8, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு.”

தண்ணீரில் மலர்ந்திருக்கும் பூவினுடைய தண்டினது நீளம், தண்ணீர் உயரத்திற்கு இருக்கும். அதேபோல் ஒருவர் உள்ளத்தில் ஊக்கம் எந்த அளவு இருக்கின்றதோ அந்த அளவிற்கு உயர்வு இருக்கும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 151, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

151—

நூலகத்திற்குக் கட்டடம்

***27736—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கோணங்கி அள்ளி ஊராட்சி, C. புதூர் கிராமத்தில் உள்ள நூலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, கோணங்கி அள்ளி ஊராட்சி, C. புதூர் கிராமத்தில் பொது நூலகத் துறையைச் சார்ந்த நூலகம் ஏதும் செயல்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

திரு. பெ. சுப்ரமணி: உலகெங்கும் வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் பாதுகாவலராக இருந்து வருகின்ற முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். ஓய்வறியா உழைப்பாளி எங்களுடைய கழகத்தின் செயல் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, கோணங்கி அள்ளி ஊராட்சி, C. புதூர் கிராமத்தில் உள்ள நூலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நூலகத்திற்கு கட்டடம் கட்டித் தரப்படுமா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே நூலகம் இல்லை என்ற பதிலைச் சொல்லியிருக்கின்றார். நூலகம் கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நூலகத்திற்கு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாகச் செயல்படும் நூலகம் அங்கே இல்லை என்று நான் நினைக்கிறேன். ஏனென்று சொன்னால், எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பதில் அப்படித்தான் இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, அங்கே புதியதாக நூலகம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

2018 ஜூன் 8]

திரு. பெ. சுப்ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் முதல்வராக இருந்தபொழுதுதான் 2010 ஆம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக அனைத்து ஊராட்சிகளுக்கும் நூலகத்தை அமைத்துத் தந்தார். தற்போது பெரும்பாலான நூலகங்கள் செயல்படாமல் மூடிய நிலையில் உள்ளன. கிராமப்புற படித்த மாணவர்கள் தங்களுடைய பொது அறிவை வளர்த்துக்கொள்ள இயலாத நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, மூடிக் கிடக்கின்ற அனைத்து நூலகங்களையும் இந்த அரசு மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பல நூலகங்கள் திறக்கப்பட்டன. தற்போது தமிழ்நாட்டில் 4,622 நூலகங்கள் இயங்கி வருகின்றன. மாவட்ட நூலகங்கள் 32-ம், கிளை நூலகங்கள் ஏறத்தாழ 1926-ம், ஊர்ப்புற நூலகங்கள் 1915-ம் செயல்பட்டு வருகின்றன. முழு நேர நூலகங்கள் 345 இயங்கி வருகின்றன. அந்த நூலகங்கள் அனைத்தையும் கணினிமயமாக்கிச் செயல்படுத்தி வருகிறோம். மாவட்ட அளவிலே தலைநகரங்களில் இருக்கின்ற 32 நூலகங்களிலும் வருகின்ற ஒரு மாத காலத்திற்குப் பிறகு, IAS Academy-ஐ அங்கே உருவாக்கி, அதன் மூலமாக மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதியிலிருக்கின்ற மாநகராட்சி 7-வது வார்டுக்குட்பட்ட அரியமங்கலம் உள் கிராமத்தில் இருக்கின்ற நூலகம் சுமார் 70 வருடங்கள் பழமையான ஒரு நூலகம் ஆகும். அங்கு 24 ஆயிரம் புத்தகங்கள் இருந்தன. மழையின் காரணமாக 5 ஆயிரம் புத்தகங்கள் சேதமடைந்து, 19 ஆயிரம் புத்தகங்கள்தான் தற்போது

இருக்கின்றன. சுமார் 3 ஆயிரம் உறுப்பினர்கள் அந்த நூலகத்தில் இருக்கிறார்கள். பொதுவாக, உள்ளாட்சித் துறையின் மூலமாக வசூலிக்கப்படுகின்ற வரியில் ஒரு குறிப்பிட்ட சதவிகித நிதியினை இதுபோன்ற நூலக வளர்ச்சிக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று ஒரு விதியே இருக்கிறது. உள்ளாட்சித் துறை மூலமாக வசூலிக்கப்படும் வரியில் ஒரு குறிப்பிட்ட சதவிகித வரியை முறையாகப் பயன்படுத்தியிருந்தால் இந்தமாதிரியான ஒரு நிலை அந்த நூலகத்திற்கு வந்திருக்காது. ஆக, இதற்கு இந்த அரசு ஆவன செய்து உரிய முறையில் அதற்கான நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உள்ளாட்சித் துறையின் மூலமாக Cess Fund என்று சொல்லப்படுகிற அந்த நிதி ஆண்டுதோறும் நூலகங்களுக்கு வழங்கப்படுகிறது. Cess Fund-ஐப் பொறுத்தவரையில், பல நூலகங்களுக்கு வழங்கப்படாமல் அதிலே arrears இருக்கிறது. இருந்தாலும்கூட மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் ஆணையின்படி இப்போது நிலுவையில் இருக்கின்ற அத்தனை நிதியையும் நூலகங்களுக்குத் தருவதற்கு உள்ளாட்சித் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10-05

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 70 ஆண்டுகாலம் பழமையாக இருக்கிற அந்த நூலகத்தில் ஏறத்தாழ 24,000 சிறந்த நூல்கள் பயன்படுத்தப்பட்டு வந்து, அதில் இன்றைக்கு கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் தண்ணீரிலே நனைந்து பயனில்லாத நிலையில் இருப்பதாக உறுப்பினர் குறிப்பிட்டார்கள். அங்கே 3,000 உறுப்பினர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களோடு ஒருங்கிணைந்து மாவட்ட துணை நூலக ஆய்வரோடு பேசி, அந்நூலகத்தைப் பராமரிக்க என்னென்ன நடவடிக்கையை எடுக்க வேண்டுமோ அதை விரைந்து இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

2018 ஜூன் 8]

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் என்பது முக்கியமான ஒன்று என்பது அனைவருக்கும் தெரியும். அதிலும் குறிப்பாக, சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையிலே, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியிலேதான் நூலகங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆனால், இருக்கக்கூடிய நூலகங்கள் எல்லாம் முறையாகப் பராமரிக்கப்பட முடியாத நிலையிலே உள்ளன. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அதிகமான அளவுக்கு வாசகர்கள் பயன்படுத்தக்கூடிய நூலகங்கள்கூட இன்றைக்கு பழுதடைந்திருக்கின்றன. எனவே, அதையெல்லாம் உடனடியாகச் சீர்படுத்துகின்ற முயற்சியிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக நான் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்போதுதான் Cess Fund உள்ளாட்சித் துறையின் மூலமாக நூலகங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றது. இதைப் பயன்படுத்தி கொளத்தூர் தொகுதியிலே எந்தெந்த நூலகங்கள் பராமரிக்கப்பட வேண்டுமோ அவற்றைப் பராமரிப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களுக்காக எண்ணற்ற நலத் திட்டங்களைத் தீட்டி, அதனைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்த மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு நீங்காமல், ஒவ்வொருவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா என்னும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழ்நாட்டில் சிறப்பாக ஆட்சி புரிந்துவரும் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நூலகத்திற்கு நம்முடைய அரசின் சார்பாகப் புதிய கட்டடத்தைக் கட்டித் தருமாறு, பள்ளிக் கல்வித் துறையிலே சிறந்து விளங்கும் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதிலே கொண்டுதான் இந்த அரசு செயல்படுகிறது. புதிதாக நூலகங்களைக் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கைகள் பல இடங்களிலே இருந்து வந்து கொண்டிருக்கின்றன. இருந்தபோதிலும் நூலகத்திற்கு கட்டடங்கள் கட்டத் தேவையான நிதி இல்லாத காரணத்தினால் ஆண்டுதோறும் எவ்வளவு நூலகங்கள் வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன என்பதை அரசு கணக்கிட்டு வருகிறது. 5 சென்ட் இடம் இருந்தால் போதும். அந்த இடத்திலே புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. படிப்படியாக அவற்றிற்கு கட்டடம் கட்டும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் இந்த ஆண்டே வேண்டுமென்று சொன்னால், உங்கள் நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாயைத் தருவீர்களேயானால், இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரம், 34-வது வட்டம், பட்டைக்கோயில் அருகிலே இருக்கிற சேர்மன் சடகோபன் தெருவிலே நூலகம் அமைப்பதற்கான இடம் இருக்கிறது. நூலகம் அமைப்பதற்கு அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் தயாராக இருக்கிறார்கள்.

2018 ஜூன் 8]

புரவலர்கள், உறுப்பினர்கள், நூலகம் அமைப்பதற்கான தளவாடங்கள் அனைத்தும் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். நூலகம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூலகங்கள் அமைப்பதற்கு அங்கே நூலக வாசகர்கள் நிறைய பேர் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதேபோல, இடமும் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசினுடைய விதிமுறைகளுக்குட்பட்டு அனைத்தும் இருக்குமேயானால் இந்த ஆண்டே உறுப்பினர் கோரும் இடத்தில் நூலகம் துவங்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மஸ்தான் அவர்கள்.*

திரு. கே.எஸ். மஸ்தான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி நகரத்தில் பழமை வாய்ந்த நூலகம் இயங்கி வந்தது. தற்போது அந்த நூலகக் கட்டடம் இடிந்து விழுந்துவிட்ட காரணத்தினால் அந்த நூலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கே போதிய அளவிற்கு இடம் இருக்கிறது. எனவே, அந்த இடத்தில் புதிய நூலகத்தை அமைத்துத் தர அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செஞ்சியில் இருக்கின்ற பழைய நூலகம் இடிந்து விழுந்துவிட்டதால், தற்சமயம் அது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்கள். மாவட்ட நூலகத் துறை அலுவலர் அவர்களை அங்கே சென்று பார்வையிடச் சொல்லி, புதிதாகக் கட்டடம்*

கட்ட என்ன செலவாகும் என்பதைத் தெரிந்துகொண்டு, அதற்குப் பிறகு அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கிராமப்புறங்களிலே அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் திறக்கப்பட்ட அண்ணா பெயரில் அமைந்த 12,365 நூலகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. கிராமப்புற மக்கள் அவற்றையெல்லாம் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவற்றைத் திறக்க வேண்டும். அதேபோல், பல்வேறு நூலகங்களை பல்வேறு தேசிய வங்கிகள் தத்தெடுத்துக் கொண்டு, அவர்கள் அங்கே அதிகளவு புத்தகங்களை நன்கொடையாக வழங்க ஆவன செய்யப்படுமா?*

எங்களுடைய செயல் தலைவர் அவர்கள் பொன்னாடைகளுக்குப் பதிலாக தனக்கு வரக்கூடிய பல நூல்களை பல்வேறு நூலகங்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார். அப்படி தனியார்கள் வழங்கக்கூடிய நூல்களை அரசு நூலகங்கள் பெறுவதற்கு அரசு உத்தரவிடுமா என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், தொடர்ந்து நூலகங்களுக்கு உறுப்பினர் சேர்ப்பதைப் பொறுத்தவரையில் இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற நூலகங்களில்கூட உறுப்பினர் சேர்ப்பு பற்றி விளம்பரம் செய்யாமல் இருக்கிறார்கள். நிறைய பேர் அவற்றில் உறுப்பினர்களாகச் சேர விரும்புகிறார்கள். அதுபோன்று, மாவட்டங்களில் இருக்கின்ற பல நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேர விரும்புகின்றனர். ஆகவே, விளம்பரப்படுத்தி உறுப்பினர் சேர்க்கைக்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்*

2018 ஜூன் 8]

அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நூலகங்களிலே வாசகர்களை சேர்ப்பது தொடர்பாக இந்த அரசு இந்த ஆண்டு 3 இலட்சம் பேர் என்று இலக்கு வைத்திருக்கிறது. ஒரே மாத காலத்தில் ஒரு இலட்சத்து 17 ஆயிரம் பேர் பல்வேறு நூலகங்களில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்களின் புனிதப் பெயரால் இருக்கின்ற நூலகத்தைச் சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்ற ஒரு கருத்தையும் உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுடைய அரசுதான் இன்றைக்கு இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அரசு, கிராமப்புற நூலகங்களைத் திறக்க சிறப்பான முறையில் செயலாற்றும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் புனிதப் பெயரில் இருக்கின்ற நூலகத்திற்கு இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, வரலாற்றை படைத்துக்கொண்டிருக்கிற ஓர் அரசாக இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) *என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், நூலகங்களுக்கு நீங்கள் யார் வேண்டுமானாலும் சிறந்த நூல்களைத் தரலாம். அவற்றை அந்த நூலகங்கள் பயன்படுத்துவதற்கு அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எவ்வளவு புத்தகங்கள் வேண்டுமென்றாலும் நீங்கள் வழங்கலாம். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த நூல்களை அரசு நூலகங்களில் வைக்கலாம் என்பதைப் பரிசீலிக்கும் பணிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. ஆகவே, நீங்கள் எவ்வளவு நூல்கள் வழங்கினாலும், அவற்றை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*